**செப்டம்பர் – 09**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 04 ஆம் தேதியன்று ஐக்கியப் பேரரசில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பெரியாரின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.
- இந்தியாவின் முதல் துறைமுக அடிப்படையிலான பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி சோதனை நிலையமானது, தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் உள்ள V.O. சிதம்பரனார் துறைமுகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## IGST தீர்வு அறிக்கை





- புது டெல்லியில் நடைபெற்ற 56வது சரக்கு மற்றும் சேவை வரி (GST) சபைக் கூட்டத்தில் தமிழ்நாடு பங்கேற்றது.
- ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவை வரி (IGST) தீர்வு குறித்த அதிகாரிகள் குழுவின் அறிக்கையைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு எடுத்துரைத்தார்.
- 2025 ஆம் ஆண்டின் டிசம்பர் மாத இறுதிக்குள் IGST தீர்வு அறிக்கையை முழுமையாக செயல்படுத்த GST சபை ஒப்புக் கொண்டது.
- இந்த ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி முதல் இரண்டு முதல் மூன்று மாதங்களுக்கு சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் (பாவ) பொருட்களுக்கு இழப்பீட்டு வீத வரி விதிக்கும் காலத்தை நீட்டிக்கவும் சபை பரிந்துரைத்துள்ளது.

## சுயமரியாதை இயக்கத்தின் 100 ஆம் ஆண்டு நிறைவு

- 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், 1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவு கடைபிடிக்கப் பட்டது.
- சமூக சீர்திருத்தவாதி ஈ.வே. இராமசாமி அவர்கள் தமிழ் வார இதழான குடியரசு மூலம்

இந்த இயக்கத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கினார்.

- இது சாதி அமைப்பை ஒழிப்பது, பகுத்தறிவு சிந்தனையை ஊக்குவித்தல் மற்றும் பிராமணிய மரபுகளின் ஆதிக்கத்தை எதிர்ப்பதை நோக்கமாகக் கொண்டது.
- அதன் நோக்கங்கள் ஆனது நமது குறிக்கோள் மற்றும் திராவிட கழக இயக்கம் ஆகிய இரண்டு துண்டுப் பிரசுரங்களில் கோடிட்டுக் காட்டப் பட்டன.
- இந்த இயக்கத்தின் இரண்டு முக்கியப் பெண் தலைவர்கள் அன்னை மீனாம்பாள் மற்றும் வீரம்மாள் ஆகியோர் ஆவர்.
- சுயமரியாதை இயக்கம் ஆனது சுயமரியாதைத் திருமணங்கள், விதவைகள் மறுமணம், பெண்களின் சொத்துரிமை, மற்றும் கலப்புத் திருமணங்கள் போன்ற சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது.
- பெரியார் அரசியல் சுதந்திரத்தை விடப் பகுத்தறிவு, பெண் உரிமைகள் மற்றும் சமூக சமத்துவத்தை ஊக்குவித்தார்.
- இந்த இயக்கம் பிராமணரல்லாத மக்களுக்கு அதிகாரம் அளித்தது மற்றும் எதிர்காலத் திராவிட அரசியலுக்கான சித்தாந்தத் தளத்தினை உருவாக்கியது.
- 1916 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நீதிக்கட்சி, இதற்கான அடித்தளத்தை அமைத்தது, ஆனால் பெரியார் பரந்த அளவிலான மக்களை அணிதிரட்டும் வரை இது உயரடுக்கினருக்குள் மட்டுமே இருந்தது.
- தமிழ்ச் சமூகத்தில் பெரிய கட்டமைப்புச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கும், வேரூன்றிய படிநிலைகளை எதிர்த்து குரலெழுப்புவதற்கும் (கேள்விக்கு உட்படுத்துவதற்கும்) சுயமரியாதை இயக்கம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.





# தேசியச் செய்திகள்

## SRS 2023 அறிக்கை

- 2023 ஆம் ஆண்டு மாதிரிப் பதிவு கணக்கெடுப்பு (SRS) புள்ளிவிவர அறிக்கையின் படி, இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) 2023 ஆம் ஆண்டில் 1.9 ஆகக் குறைந்து

உள்ளது.

- இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக இது 2.1 என்ற மாற்றீடு அளவிற்கும் கீழே சரிந்தது.
- 2022 ஆம் ஆண்டில் 19.1 ஆக இருந்த பிறப்பு விகிதம் (CBR) ஆனது 2023 ஆம் ஆண்டில் 18.4 ஆகக் குறைந்தது.
- பெரிய மாநிலங்களில், பீகாரில் 25.8 என்ற மிக அதிக CBR விகிதமும், 2.8 என்ற மிக அதிக TFR விகிதமும் பதிவாகின, அதே நேரத்தில் தமிழ்நாட்டில் 12 என்ற மிகக் குறைந்த CBR விகிதம் பதிவானது.
- டெல்லி 1.2 என்ற மிகக் குறைந்த TFR பதிவானது, அதைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் (1.3), தமிழ்நாடு (1.3) மற்றும் மகாராஷ்டிரா (1.4) இடம் பெற்றுள்ளன.
- மொத்தம் 18 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் 2023 ஆம் ஆண்டில் 2.1 என்ற மாற்றீடு அளவை விடக் குறைவான TFR விகிதங்களைக் கொண்டிருந்தன.
- 2023 ஆம் ஆண்டில் இறப்பு விகிதம் ஆனது 6.4 ஆகக் குறைந்துள்ளது என்பதோடு இது முந்தைய ஆண்டை விட 0.4 புள்ளிகள் குறைவு ஆகும்.
- குழந்தை இறப்பு விகிதம் (IMR) 2023 ஆம் ஆண்டில் 1 புள்ளி குறைந்து 1,000 பிறப்புகளுக்கு 25 இறப்புகளாகப் பதிவானது.
- பிறப்பின் போதான பாலின விகிதம் (SRB) 1,000 ஆண் குழந்தைகளுக்கு 917 பெண் குழந்தைகளாக மேம்பட்டது, கேரளா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் முறையே 971 மற்றும் 974 என்ற அதிகபட்ச SRB விகிதம் பதிவானது.
- உத்தரகாண்டில் 868 என்ற மிகக் குறைந்த SRB பதிவானது, மேலும் 2020 ஆம் ஆண்டில் 964 ஆக இருந்த பீகாரின் SRB, 897 ஆக சற்று உயர்ந்தது.
- முதியோர் எண்ணிக்கை (60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்) தேசிய அளவில் 9.7% ஆக அதிகரித்துள்ளது என்பதோடு கேரளாவில் அதிகபட்சமாக 15% பதிவாகி உள்ளது.




## குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் சட்டம், 2025

- 2015 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதிக்கு முன்னதாக இந்தியாவிற்குள் நுழைந்த

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு, 2025 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளி நாட்டினர் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தண்டனை நடவடிக்கையிலிருந்து உள்துறை அமைச்சகம் (MHA) விலக்கு அளித்தது.

- செல்லுபடியாகும் கடவுச் சீட்டு, பயண ஆவணங்கள் அல்லது நுழைவு இசைவுச் சீட்டுகள் இல்லாத அகதிகளுக்கு, அவர்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் மற்றும் வெளியேறும் வசதியை வழங்குகிறது.
- பதிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் செப்டம்பர் 02 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டு புதிய குடியேற்றம் மற்றும் வெளிநாட்டினர் (விலக்கு) உத்தரவின் கீழ் சட்ட விரோத குடியேறிகளாகக் கருதப்பட மாட்டார்கள்.
- 2025 ஆம் ஆண்டு சட்டம் ஆனது ஆவணமற்ற வெளிநாட்டினருக்கு 5 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கிறது.




- 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், தாமாக முன்வந்து, சொந்த நாட்டிற்குத் திரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கான நுழைவு இசைவுக் கட்டணங்கள் மற்றும் தங்கியிருக்கும் காலத்தினைக் கடந்ததற்கான தண்டனைகளை மத்திய அரசு தள்ளுபடி செய்தது.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்பு இந்தியாவிற்குள் நுழைந்த ஆப்கானிஸ்தான், வங்காளதேச மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆறு சிறுபான்மைச் சமூகங்களுக்கும் மத்திய அரசு விலக்கு அளித்தது.
- இந்த ஆறு சமூகங்களில் மதத் துன்புறுத்தல் அல்லது அச்சத்தை எதிர்கொள்ளும் இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், சமணர்கள், பார்சிகள் மற்றும் கிறிஸ்தவர்கள் அடங்குவர்.
- இந்த விலக்கு ஆனது, இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பான அவசியப் படிநிலையான நீண்ட கால நுழைவு இசைவுச் சீட்டுகளுக்கு (LTV) விண்ணப்பிக்க அவர்களுக்கு உதவுகிறது.
- குடியுரிமை (திருத்தம்) சட்டம், 2019 ஆனது இந்தச் சமூகங்கள் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அல்லது அதற்கு முன்பு இந்தியாவிற்குள் நுழைந்தால் மட்டுமே அவர்களுக்கு குடியுரிமையை அனுமதிக்கிறது.

- இந்த விலக்கு 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்கு அப்பால் குடியுரிமை திருத்தச் சட்டத்தின் (CAA) கால வரம்புத் தேதியை நீட்டிக்காது.
- அதிகாரிகளின் கூற்றுப்படி, ஆவணமற்றப் புலம்பெயர்ந்தோர் மீதான குற்றவியல் நடவடிக்கைகளை இந்த விலக்கு தடுக்கிறது மற்றும் அவர்கள் தங்குவதற்கு உதவுகிறது.
- குடியுரிமைச் சட்டம், 1955 ஆனது, 11 ஆண்டுகள் இந்தியாவில் வசித்த பிறகு குடியுரிமை பெற அனுமதிக்கிறது, அதே நேரத்தில் CAA தகுதியான சமூகங்களுக்கு இந்தக் கால வரம்பினை 5 ஆண்டுகளாகக் குறைக்கிறது.
- இந்த விலக்கு உத்தரவு ஆனது செல்லுபடியாகும் ஆவணங்கள் இல்லாமல் நாட்டிற்குள் நுழைந்த அல்லது ஆவணங்கள் காலாவதியான நபர்களுக்குப் பொருந்தும்.


## சுற்றுச்சூழல் தணிக்கை விதிகள் 2025




- 2025 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தணிக்கை விதிகள், சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த விதிகள் சுற்றுச்சூழல் தணிக்கைகளை மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களின் (SPCBs) அதிகார வரம்பினை மீறிச் செயல்பட அனுமதிக்கின்றன.
- இந்தப் புதிய கட்டமைப்பின் கீழ், தனியார் நிறுவனங்கள் தற்போது உரிமம் பெற்ற சுற்றுச்சூழல் தணிக்கையாளர்களாக அங்கீகாரம் பெறலாம்.
- சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு தரநிலைகளுடன் இணங்குவதை தணிக்கையாளர்கள் மதிப்பிடுவார்கள்.
- இந்த நடவடிக்கையானது மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) மற்றும் SPCB போன்ற தற்போதைய ஒழுங்குமுறை அமைப்புகளில் மனிதவளம் மற்றும் உள்கட்டமைப்புப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் UPI பரிவர்த்தனைகள்





- ❖ ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 20.01 பில்லியன் பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தியது.
- ❖ இது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதிவான 14.9 பில்லியன் பரிவர்த்தனைகளிலிருந்து 34 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- ❖ 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பரிவர்த்தனை மதிப்பு 24.85 லட்சம் கோடி ரூபாயாகும்.
- ❖ இந்த மதிப்பு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 20.60 லட்சம் கோடி ரூபாயை விட 21 சதவீதம் அதிகமாகும்.
- ❖ இதுவரையில் அதிகபட்ச மாதாந்திரப் பரிவர்த்தனை மதிப்பு 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் பதிவான 25.14 லட்சம் கோடி ரூபாய் ஆகும்.

## சேவைத் துறையின் வளர்ச்சி - ஆகஸ்ட் 2025

- ❖ இந்தியாவின் சேவைகள் துறையின் வளர்ச்சி ஆகஸ்ட் மாதத்தில் 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகரித்தது.
- ❖ கடந்த காலாண்டில் இந்தத் துறை எதிர்பார்த்ததை விட மிக அதிகமாக 7.8% விகிதத்தில் வளர்ந்தது.
- ❖ 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 60.5 ஆக இருந்த HSBC இந்தியச் சேவைகள் கொள்முதல் மேலாளர்கள் குறியீடு (PMI) ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 62.9 ஆக உயர்ந்தது.
- ❖ S&P குளோபல் நிறுவனத்தின் படி, இது சேவைத் துறையில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவிலான மிக அதிக PMI குறியீடாகும்.


- சேவைத் துறையானது வலுவான புதிய கொள்முதல் ஆர்டர்கள் மற்றும் உலகளாவிய விற்பனையால் 60 என்ற குறியீட்டினைத் தாண்டுவது இது தொடர்ந்து மூன்றாவது மாதமாகும்.
- ஜூலை மாதத்தில் 61.1 ஆக இருந்த, சேவைகள் மற்றும் உற்பத்தித் துறைகளை ஒருங்கிணைக்கும் கூட்டு PMI, ஆகஸ்ட் மாதத்தில் 17 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 63.2 ஆக உயர்ந்தது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## தொலைநோக்கு, மொழி மற்றும் கற்றல் குழு

- ஜோத்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் தொலைநோக்கு, மொழி மற்றும் கற்றல் குழு (VL2G) 13 இந்திய மொழிகளுக்கான செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரிகளை உருவாக்கி வருகிறது.
- இந்த மாதிரிகள் ஆனது பன்மொழி சார்ந்த வழிசெலுத்தல் மற்றும் நிகழ்நேர மொழிபெயர்ப்பை ஆதரிப்பதற்காக படங்களில் உள்ள உரையைப் படித்து மொழி பெயர்க்கின்றன.
- VL2G ஆனது, உள்ளர்ந்தக் கற்றலைப் பயன்படுத்திப் பண்டைய கையெழுத்துப் பிரதிகளை எண்ணிம முறையில் மீட்டெடுப்பதற்காக இந்திரா காந்தி தேசியக் கலை மையத்துடன் (IGNCA) இணைந்து செயல்படுகிறது.



## காந்தப்புலங்களுடன் கூடிய தூசித் துகள்கள்




- பால்வெளி அண்டத்தில் உள்ள காந்தப்புலங்களுடன் கூடிய தூசித் துகள்களின் சீரமைப்பை உறுதிப்படுத்தும் ஓர் ஆய்வினை இந்திய வானியற்பியல் நிறுவனம் (IIA) முன்னேடுத்து நடத்தியது.
- 12,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள G34.43+0.24 எனப்படும் அகச்சிவப்பு கரும்பொருள் திரளை இந்தக் குழு ஆய்வு செய்தது.
- சில மைக்ரோமீட்டர் அளவில் உள்ள தூசித் துகள்கள், சிலிகேட் மற்றும் கரிம / கார்பனேசியப் பொருட்களால் ஆனவை என்பதோடு மேலும் அவை விண்மீன் மண்டல இடையகங்கள் முழுவதும் காணப்படுகின்றன.
- அவை நட்சத்திரம் மற்றும் கிரக உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன, என்பதோடு மேலும் 1949 ஆம் ஆண்டிலிருந்து கண்டறியப்பட்ட நட்சத்திர ஒளியின் துருவமுனைவாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.
- துருவமுனைவாக்கம் குறித்தத் தரவுகள் ஆனது தூசித் துகள்கள் காந்தப்புலக் கட்டமைப்புகளை எவ்வாறு கண்டறிகின்றது என்பதையும், அடர்வான நட்சத்திர உருவாக்க மையங்களில் அவை எவ்வாறு மாறுபடுகிறது என்பதையும் வெளிப்படுத்தியது.
- சூழ்நிலைகளைப் பொறுத்து தூசித் துகள்கள் வித்தியாசமாகச் செயல்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.
- சில சூழல்களில், இந்தத் தூசித் துகள்கள் காந்தப்புலங்களுடன் நேர்த்தியாக இணைகின்றன.
- மற்றவற்றில், அவை வலுவான நட்சத்திர ஒளியில் மிக வேகமாகச் சுழன்று, சிறிய துண்டுகளாக உடைந்து, அவற்றின் சீரமைப்பைப் பலவீனப்படுத்துகின்றன.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கடல்சார் விலங்குகளுக்கான உதவி எண்

- ரீஃப்வாட்ச் கடல் வளங்காப்பு நிறுவனத்தினால் தமிழ்நாட்டில் மத்ஸ்யா என்ற புதிய

கடல் சார் தொலை மருத்துவ உதவி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

- இந்த முன்னெடுப்பானது, மாநிலத்தின் கடற்கரையோரத்தில் சிக்கித் தவிக்கும் அல்லது காயமடைந்த கடல் வாழ் விலங்குகளை மீட்கும் நடவடிக்கைகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு கடல் வாழ் விலங்குகள், காயம், நோய் அல்லது அவற்றின் இயக்கத்தின் திசைத் திருப்பல் காரணமாக கடலுக்குத் திரும்ப முடியாதபோது கரை ஒதுங்குகின்றன.
- 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ஆலிவ் ரெட்லே/சிற்றாமைகள் இறப்புக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக, அவற்றின் பிரேதப் பரிசோதனைகளை நடத்துவதில் ரீஃப்வாட்ச் வனத்துறைக்கு உதவியது.
- மத்ஸ்யா, +91 6360249764 என்ற உதவி எண் மூலம் மீனவர்கள் மற்றும் உள்ளூர் உதவியாளர்களுக்கு தொலைதூர விலங்கு நல ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குகிறது.
- கோவா மற்றும் கர்நாடகாவில் 2024 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் ரீஃப்வாட்ச் அமைப்பு, 494 கடல்சார் விலங்குகள் கரை ஒதுங்குவதைத் தடுப்பது தொடர்பான முந்தைய நடவடிக்கைப் பணிகளை மத்ஸ்யா உருவாக்குகிறது.





# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தாதாபாய் நௌரோஜி அவர்களின் 200வது பிறந்தநாள்

- தாதாபாய் நௌரோஜி 1825 ஆம் ஆண்டு செப்டம்பர் 04 ஆம் தேதியன்று பிறந்தார்.
- இலண்டனில் உள்ள ஃபின்ஸ்பரி மத்திய தொகுதியிலிருந்து 1892 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் இவர் ஆவார்.
- பார்சி சமூகத்தைச் சீர்திருத்துவதற்காக வேண்டி 1851 ஆம் ஆண்டில் இரஹ்னுமாய் மஸ்தயாசன் சபையை அவர் நிறுவினார்.
- 1854 ஆம் ஆண்டில் ராஸ்ட் கோஃப்தார் எனும் குஜராத்தி மொழி செய்தித் தாளினை

(உண்மை விளம்பி) தொடங்கினார்.

- 1845 ஆம் ஆண்டில் எல்பின்ஸ்டோன் கல்லூரியில் பட்டம் பெற்ற முதல் இந்தியர் இவர் ஆவார் என்பதோடு 1854 ஆம் ஆண்டில் அதன் முதல் இந்தியப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார்.
- 1848 ஆம் ஆண்டில் இலக்கிய மற்றும் அறிவியல் சங்கத்தை நிறுவிய இவர், 1849 ஆம் ஆண்டில் மும்பையில் பெண்களுக்காக ஆறு பள்ளிகளைத் தொடங்கினார்.
- நௌரோஜி அவர்கள் 1874 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பரோடாவின் திவானாக (முதலமைச்சர்) சிறிது காலம் பணியாற்றினார் ஆனால் ஒரு மாதத்திற்குள் அதனை அவர் இராஜினாமா செய்தார்.
- காமா அண்ட் கம்பெனியில் பணி புரிந்த பிறகு, இங்கிலாந்தில் பருத்தி வர்த்தக நிறுவனமான தாதாபாய் நௌரோஜி அண்ட் கம்பெனியை அவர் நிறுவினார்.
- பிரிட்டிஷ் சட்டமியற்றுபவர்கள் முன் இந்தியாவின் வழக்கை முன் வைக்க 1867 ஆம் ஆண்டு ஆண்டில் இலண்டனில் கிழக்கு இந்தியச் சங்கத்தை நிறுவினார்.
- Drain Theory என்று அழைக்கப்படும் அவரது பொருளாதார விமர்சனப் புத்தகமானது, பிரிட்டிஷ் ஆட்சியானது இந்தியாவின் செல்வத்தை எவ்வாறு சுரண்டியது என்பதைக் வெளிக் கொணர்வதற்காக அதிகாரப்பூர்வத் தரவுகளைப் பயன்படுத்தியது.
- நௌரோஜி அவர்கள் 1876 ஆம் ஆண்டில் "Poverty of India" மற்றும் 1901 ஆம் ஆண்டில் "Poverty and Un-British Rule in India" ஆகிய புத்தகங்களை எழுதினார்.
- 1886, 1893 மற்றும் 1906 ஆகிய ஆண்டுகளில் இந்திய தேசிய காங்கிரஸில் மூன்று முறை தலைவராக இருந்தார்.
- நௌரோஜி அவர்கள் 1905 ஆம் ஆண்டில் ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற சோசலிச சர்வதேச மாநாட்டில் அவரது 80 வயதில் கலந்து கொண்டார்.




# இதரச் செய்திகள்

## வெள்ளி தர அடையாளப் படுத்துதல்

- ஹால்மார்க்கிங் (தர அடையாளப்படுத்துதல்) தனித்துவமான அடையாள அடிப்படையிலான (HUID) வெள்ளி ஹால்மார்க்கிங் ஆனது 2025 ஆம் ஆண்டு

செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் தன்னார்வ அடிப்படையில் தொடங்கப்பட்டது.

- நுகர்வோர், BIS கேர் செயலியைப் பயன்படுத்தி வெள்ளியின் தூய்மைத் தன்மையை சரிபார்த்து, அந்த வெள்ளிப் பொருட்களின் விவரங்களைக் கண்டறியலாம்.
- இந்தியத் தரநிலைகள் வாரியம் (BIS) ஆனது, வெள்ளி ஹால்மார்க்கிங் தரநிலைப் படுத்தலுக்கான IS 2112:2025 என்ற தர நிலைக்கு மாற்றாக IS 2112:2025 என்ற தர அடையாளத்தினை வெளியிட்டுள்ளது.
- புதிய ஹால்மார்க் தர நிலையில் "SILVER/வெள்ளி" என்ற சொல்லுடன் கூடிய BIS தரநிலை அடையாளக் குறி, தூய்மை தன்மைக்கானத் தரம் மற்றும் ஒரு HUID குறியீடு ஆகியவை அடங்கும்.
- 958 மற்றும் 999 ஆகிய இரண்டு புதிய தூய்மை தர நிலைகள் சேர்க்கப்பட்டுள்ளன இதனால் மொத்த வெள்ளி தரங்களின் எண்ணிக்கை ஏழாக உயர்ந்துள்ளது.
- தற்போது, 87 மாவட்டங்களில் 230 BIS அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு மற்றும் ஹால்மார்க்கிங் மையங்கள் செயல்படுகின்றன.
- 2024–25 ஆம் நிதியாண்டில் 32 லட்சத்திற்கும் மேற்பட்ட வெள்ளி நகைப் பொருட்கள் ஹால்மார்க் செய்யப்பட்டன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★